# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No.95/2018

2026ம் ஆண்டு மே மாதம் 07ஆம்நாள் வியாழன் கிழமை அரசு தரப்பு சாட்சி– 06, திரு.ரவிச்சந்திரன்என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிச்சந்திரன் | வயது | : | 47 |
| த.பெ/ க.பெ. | : | சாமிக்கண்ணு | தொழில் | : | மருத்துவர் |
| ஊர் | : | | நிலை | : | Lw07/ Pw06 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரிகள் 1, 2ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.02.2018ம்தேதியன்று மாலை 04.15 மணியளவில், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் இருப்பு பணி மருத்துவராக பணியில் இருந்தபோது, இலையூரைச் சேர்ந்த மல்லிகா, வயது 48, க/பெ.ராசு என்பவரை அவருடைய மகள் மேனகா என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு லேசான சுயநினைவு இழந்த நிலையில் காணப்பட்டார். அவரை அழைத்து வந்த அவரது மகளை விசாரித்தபோது, மல்லிகாவை

அவருக்கு தெரிந்த 8 நபர்கள் (5 பெண்கள், 3 ஆண்கள்) இலையூரில் 06.02.2018ம் தேதி மதியம் 02.00 மணியளவில் கத்தியால் வெட்டியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது, மல்லிகாவிற்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

1) வெட்டுக்காயம் 4x 1.5 x 1 செ.மீ. அளவில் தலையின் உச்சி பகுதியில் காணப்பட்டது.

மேல் சிகிச்சைக்கு அவர் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டார். அங்குஅவருக்கு CT ஸ்கேன் தலை பகுதிக்கு எடுக்கப்பட்டது. அதில் எந்த எலும்பு உடைவின்றி மூளையின் உள்பகுதியில் எந்த காயமும் இன்றி இயல்பாக காணப்பட்டது. அவருக்கு அங்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.பாண்டியன் என்பவர் கொடுத்த கருத்துரையின்படி மல்லிகாவிற்கு ஏற்பட்ட மேற்கண்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் காயச் சான்றிதழ் நான் வழங்கியதுதான். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ. 03 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) மல்லிகாவிற்கு ஒரு காயத்தை தவிர வேறு எதுவும் காயங்கள் இல்லை என்றால் சரிதான்.

2) அவர் உடல்வலியோ, வீக்கமோ இருந்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) கத்தியை தவிர வேறு எந்த ஆயுதத்தாலோ தாக்கியதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) மல்லிகா காவல் நிலையம் சென்று மருத்துவ பரிந்துரை எடுத்து வந்தாரா என்றால் இல்லை.

5) நான் மேனகாவை சம்பவ இடத்தில் இருந்தாரா இல்லையா என்று நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர் சம்பவ இடத்தில் இருந்ததாகத்தான் சொன்னார். சம்பவ இடத்தில் மேனகா இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6) போலீசார் விசாரணையில் எட்டு நபர்கள் தாக்கியதாக மல்லிகாத்தான் கூறினார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள விவரங்களை போலீசார் மாற்றி அடித்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7) 8 நபர்கள் சேர்ந்து ஒரு நபரை தாக்கும்போது பல்வேறு இடங்களில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். எட்டு நபர்களில் ஒரு நபர் கையில் மட்டும் கத்தியை வைத்துக்கொண்டு தாக்கினால் ஒரு இடத்தில் மட்டும் காயம் ஏற்பட வாய்ப்புண்டு.

8) விபத்து பதிவேட்டில் 5 பெண்கள் 3 ஆண்கள் சேர்ந்து கத்தியால் தாக்கிதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) கூர்மையான தகரத்தில் வேகமாக சென்று உரசிச்செல்லும்போது, மேற்கண்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. கிழிந்த காயம் மட்டுமே ஏற்பட வாய்ப்புள்ளது.

10) கூர்மையான தகரத்தில் வேகமாக சென்று உரசிக்கொண்டால் மேற்படி அளவுள்ள காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக போலீசாருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

ஒம்/–P.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,

ஜெயங்கொண்டம்.